**பட்டினமும் சூழலும் பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| தனியார் காணிகள் உப பிரிவிடலின் போது பிரதேச சபையின் பொதுப் பயன்பாட்டிற்கென உறுதி வரையப்பட்டு கையளிக்கப்பட்ட ரூபா 8,800,000 பெறுமதியான 3 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணிகள் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | 03 ஏக்கர் விஸ்தீரண முள்ள காணிகள் மீள்மதிப்பிடு செய்ய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன | காணிகளின் சரியான பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப்படல் வேண்டும். |

#### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 05 எண்ணிக்கையான விடயங்களிற்கு நிதிக்கூற்றுக்களிற்கும் மூலஆவண மீதிகளுக்குமிடையில் ரூபா 4,970,100 ஆன வேறுபாடு காணப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளன. | உரிய நடவடிக்கை எடுக்கப்படும் | வேறுபாட்டை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | நிதிப் பிரமானம் 371 | 345,520 | செலுத்தப்பட்ட முற்பணங்கள் அனைத்தும் வேலை நிறைவு பெற்றவுடன் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 9 மாதம் தொடக்கம் 4 வருட கால வீச்சில் முற்பணங்கள் சீர் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதி பெற்றதும் நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு நோக்கம் நிறைவடைந்ததும் தீர்வு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமானம் 880 மற்றும் 2021.08.16 ஆம் திகதிய °வு.˙.03.˙.2021 ஆம் இலக்க மாகாண நிதிச் சுற்றறிக்கை | 115,000 | பிரதேச சபையின் கீழ் பணியாற்றுகின்ற பாதுகாப்பு பணம் அறவீடு செய்யப்பட வேண்டிய 18 உத்தியோகத்தர்களிடம் இருந்து பாதுகாப்பு வைப்புப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மிக விரைவில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் | பாதுகாப்பு வைப்புப் பணம் அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 44இ237இ824 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 33இ738இ878 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | வீதவரி மற்றும் வரி | | |
| ை) | ஒன்று தொடக்கம் எட்டு வருடங்களுக்கு அதிக காலமாக காணப்படும் ஆதனவரி நிலுவை ரூபா 22,812,086 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு கொவிட் - 19 காரணமாக நடமாடும் சேவை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது என்பதனை அறியத்தருகின்றேன். | நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ஐ) | ஆதனவரி தொடர்பிலான பணக் கொடுக்கல் வாங்கல்கள், பற்றுச்சீட்டு தயாரித்தல், பற்றுச்சீட்டுக்கள் வழங்குதல் போன்ற கடமைகள் வேலைக்களத் தொழிலாளி மற்றும் அலுவலக உதவியாளர் ஈடுபட சபை அனுமதித்திருந்ததுடன் இதன் மூலம் ரூபா 3,421,402 ஆன நிதி மோசடி மீளாய்வாண்டு காலம் வரை ஏற்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. | வரையறுக்கப்பட்ட ஆளணியினரை பயன்படுத்தியே அபிவிருத்தி வேலைகளுடன் சபையின் அனைத்து சேவைகளும் வழங்கப்படுகின்றது. | பதவிகளுக்கு உரித்தான வேலைகளை வழங்கிட மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| ஆ) | வாடகை<br>--------------- | | |
| | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 129(2)(ஊ) ஆம் பிரிவின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 395,411 ஆன வியாபாரத் தலங்களின் வாடகை, விடுதி வாடகை, கட்டிட வாகன வாடகை மற்றும் சந்தை வாடகையினை முறையாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு அனைத்து நிலுவைகளையும் ஆய்ந்தறிந்து பரிசீலித்து வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தங்களுக்கு தயவுடன் அறியத் தருகின்றேன். | நிலுவைகளை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| இ) | வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம்<br>------------------------------------------ | | |
| | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏழு வருடங்களுக்கு மேலாக காணப்படும் உப்புவெளி உப அலுவலகத்திற்குரிய ரூபா 98,750 ஆன உரிமக் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை விட்டொழிப்புக்குழுவின் சிபார்சுக்கு அமைவாக சீர் செய்யப்படும். | சேர்க்கப்பட்ட உரிமைக் கட்டணம் தொடர்பில் கணக்காய்விற்கு அறிவிக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | அலுவலகக் கட்டடம் நிர்மாணிக்க உள்;ர் கடன் அபிவிருத்தி நிதியத்திடம் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களிற்கு ரூபா 700,438 ஆன வருட கொடுப்பனவு மீளாய்வாண்டு செலுத்தி முடிக்கப் பட்டிருப்பினும் வங்கி உறுதிப் படுத்தலிற்கு அமைய நிலுவையாக உள்ளதுடன் உள்;ர் கடன் அபிவிருத்தி நிதியத்துடன் தொடர்பு கொண்டு நிலுவைத் தொகை சீர் செய்தமை தொடர்பில் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 11.07.2022அன்று நினைவூட்டல் அனுப்பப்பட்டது. | செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை சீர் செய்தமை தொடர்பில் உறுதிப்படுத்தல் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| ஆ) | மீளாய் வாண்டிற்கு முற்பட்ட காலப் பகுதிக்குரிய மின்சாரக் கொடுப்பனவு மற்றும் நீர்க்கட்டணம் நிலுவை ரூபா 142இ960 காணப்பட்ட போதும் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அடையாளம் காணப்பட்டு அத் தொகையை சபை அனுமதி மூலம் முழுமையாக சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காலம் கடந்த நிலுவையை சீர் செய்யப்படல் வேண்டும். |
| இ) | மீளாய்வாண்டில் திருகோணமலை வைத்தியசாலைக்கு ீஊசு இயந்திரம் பெற்றுக் கொடுப்பதற்கு 16 சனசமூக நிலையங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 1 மில்லியன் ஊழியர் நலன் புரிக் கணக்கில் இடப்பட்டுள்ளதுடன் மேலதிக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ீஊசு இயந்திரம் கொள்வனவு செய்ய சேகரிக்கப்பட்ட நிதியினை மீளளிப்பு செய்ய 07.06.2022 சபை கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு நிதி உரிய சன சமூகங்களுக்கு வைப்பிலிடப் பட்டு வருகின்றது. | உரிய தேவைக்குப் பயன்படுத்த ∴ மீளளிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ஈ) | 03 தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான தொலைத் தொடர்பு கோபுரங்களை நிறுவுவதற்கான ஒப்பந்தங்கள் மேற்கொண்டு வாடகைப் பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 3,149,072 ஆன நிலுவை பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இதுபற்றிய சரியான நடைமுறைகள் இவ்வாண்டில் சீர் செய்யப்படும். | வருமானங்களை பெருக்கிக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| உ) | பொது வைப்பு கணக்கில் மற்றும் நன்கொடை இலங்கை வங்கி கணக்கு புத்தக மீதி மற்றும் வங்கி மீதிக்கிடையில் வேறுபாடு ரூபா 678,226 இனை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கருக்கவில்லை. | பொது வங்கிக்கணக்கில் ரூபா. 647,719 மீதியானது 2003 இற்கு முன்பிலிருந்தே ஒவ்வொரு வருடமும் ஏற்பட்ட வழுக்கள் காரணமாக காசேட்டு மீதிக்கும் ஆண்டு இறுதிக் கணக்கறிக்கை க்குமான வேறுபாடுகள் காணப்படுகின்றது. | கடந்தகால வழுக்களை திருத்துவதற்கான பொறி முறை உருவாக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விட்டொழிப்புக் குழுவின் சிபார்சுக்காக இச்சீராக்கல் வழங்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |
| ஊ) | பிரதேச சபையினால் 2020 ஆம் ஆண்டின் போது பொருள் இருப்புக் கணிப்பீட்டு சபையினால் ஏல விற்பனைக்கு சிபார்சு செய்யப்பட்ட 45 பொருட்கள் மீளாய்வாண்டு காலத்தில் ஏல விற்பனை செய்யப்பட்டு ரூபா 113,500 பெறப்பட்ட போதிலும் மீளாய் வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இச் சொத்துக்களின் கொள்விலைப் பெறுமதி கணிப்பிட்டு கணக்குகளில் கழித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2020 ஏல விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் கொள்முதல் பெறுமதியை பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ள காரணத்தால் ஏல விற்பனைப் பெறுமதியை கழிப்பதற்கான பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பொருட்களின் கொள்விலைப் பெறுமதிகள் கணக்குகளில் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (எ) | சபைக்குரித்தான காணிகளை நில அளவை செய்வதற்கான மேற்பார்வைக் கட்டணங்கள் ரூபா 331,000 நிலஅளவைத் திணைக் களத்திற்கு செலுத்தப்பட்டுள்ள போதிலும் 10 காணிகளிற்கான நில அளவைப்படம் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அதற்கான நில அளவை நடவடிக்கையினை விரைவாக மேற்கொண்டு நில அளவைப் படம் பெற்றுக்கொள்வதற்கு எம்மால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்தையும் தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | உள்;ராட்சி திணைக்களத்தின் இப்பிரதேச சபைக்கு 01 மில்லியன் தொகை சேதனப்பசளை உற்பத்திக்கென விடுவிக்கப் பட்டிருந்ததுடன் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் விற்பனை எதுவும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சேதனப்பசளை உற்பத்திக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு நிதி விடுக்கப்பட்டு சுற்றுவேலி அமைப்பதற்கான பொருட்கள் கொள்வனவு செய்யப் பட்டிருந்தும் பிரதேச செயலகத்தினால் காணி வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் காரணமாக இச்செயற் திட்டத்தினை அமுல் படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. | உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஐ) | காணி கட்டடங்கள் மற்றும் தலைமை அலுவலக கட்டடங்கள் கூட்டுமொத்தம் ரூபா 168,857,613 ஆன சொத்துக்களிற்கு காணி உறுதி மற்றும் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் பெற்றுக் கொள்வதற்கு சபை முகாமையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலகத்துடன் காணி பாரதீனப்படுத்தல் சம்மந்தமான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன். | நிதிக்கூற்றில் காட்டப்பட்ட பெறுமதிக்கு உரிய ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறை வேற்றுவதற்காக துணைச் சட்டங்கள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரை 5 விடயங்களுக்காக மாத்திரம் துணைச் சட்டங்கள் விதிக்கப்பட்டிருந்தன. | துணைச்சட்டங்கள் தயாரித்தல் சம்மந்தமாக ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள் நடைபெற்று முடிக்கப்பட்டு, வரைபு துணைவிதிகளாக அமைந்தள்ளன. இதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டில் உள்ளது என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றேன். | துணைச் சட்டங்கள் விதிக்கப்பட்டு தேவையான மேற்பார்வை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் செய்யப்படாமை | | |
| | சபையின் புரடடல டிழறளநச இற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதனை தம்பலகாம பிரதேச சபைக்கு வழங்க சபைத் தீர்மானம் பெறப்பட்டுள்ளது. | திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சபையின் செயற்பாடுகளிற்கு பயன் படுத்தப்படுதல் வேண்டும். |
| ஆ) | பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள் | | |
| ை) | தனியார் காணிகளை உப பிரிவிடலின் போது பிரதேச சபையின் பொதுப்பயன் பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட ஒரு ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணிகள் பிரதேச சபையினால் எவ்விதமான பொதுப் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப் படாது 04 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளமை அவதானிக்கப் பட்டுள்ளது. | எமது சபையின் வாகனங்கள் திருத்தும் வேலைத்தளம் மற்றும் திண்மக் கழிவகற்றும் வாகனங்கள் தரிப்பிடம் அமைப்பதற்கும் பயன் படுத்துவதற்கு ஏற்ற வகையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதிப்பங்களிப்பு கிடைக்கப் பெறும் சந்தர்ப்பங்களில் குறித்த காணியினை சபைப் பயன் பாட்டிற்கு பயன் படுத்துவதற்கு உத்தேசித்து உள்ளோம். | முழுமையான பயன்பாட்டை பெற்றுக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ைை) | உப்புவெளியில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 8,250,762 இற்கு நிர்மாணிக்கப்பட்ட விற்பனை நிலையம் மீளாய்வாண்டில் வாடகைக்கு விடப்பட்டிருக்காததுடன் ரூபா 123,000 ஆன வருட வாடகை சபையின் வருமான இழப்பாக காணப்படுகின்றது. | உப்புவெளி, 3ஆம் கட்டை சந்தியில் அமையப் பெற்ற புதிய கட்டடம் வாடகை திணைக்களத்தின் மதிப்பீட்டிற்கு அமைவாக வாடகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

இ) வருடாந்த இருப்புக்கள் மீளாய்வு

| | | |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் இருப்பு கணக்கெடுப்பின் போது சபையினால் பராமரிக்கப்படும் சாம்பல்தீவு மற்றும் உப்புவெளி நூலகங்கள் முறையே 1021 மற்றும் 229 புத்தகங்கள் தொலைந்து போனமை சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அவை தொடர்பிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கமைவாக, நிதிப்பிரமாண ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்திற்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2021.09.29 ஆம் திகதிய, 01.∵.2021 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 2.1 இற்கமைவாக பிரதேசசபைத் தலைவர் மற்றும் பிரதேச செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதிகளுடன் மூன்று பேர்களைக் கொண்ட குழுவொன்றின் மூலம் சிபார்சு வழங்கப்படாது சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சிபாரிசுகளின் அடிப்படையிலும் கூட்டுமொத்தம் ரூபா 63,735,495 பெறுமதியான ஒப்பந்தங்கள் அங்கீகறிக்கப்ட்ட சங்கங்களுக்கு வழங்கப் பட்டிருந்தது. | தங்களினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை எதிர் வரும் காலங்களில் கடைப் பிடிக்கப்படும் என்பதனை தயவுடன் அறியத் தருகின்றேன். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2021 ஆண்டிற்குரிய கூட்டு மொத்தம் ரூபா 8,907,755 ஆன 15 செயற்திட்ட வேலைகள் மீளாய்வாண்டிற்குள் முடிக்கப் பட வேண்டியிருந்தும் பூரணப் படுத்தப்படாமையுள்ளது. | சீமெந்து தட்டுப்பாடு மற்றும் சில கட்டுமானப் பொருட்களின் சடுதியான விலையேற்றம் காரணமாக ஒப்பந்தகாரரால் திருத்திய புதிய மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும் | | |
| ஆரம்ப நிலை மட்டத்தில் 21 பதவி வெற்றிடங்களும், இரண்டாம் நிலை அலுவலகர் மட்டத்தில் 05 பதவி வெற்றிடங்களுக்குமாக மொத்தமாக 26 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 25.11.2021 ஆம் திகதிய ஃவு.ீ.14.ீ.2021 ஆம் இலக்க மாகாணத் திறைசேரி சுற்றுநிருபத்திற்கு முறனாக சபையினால் மீளாய் வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், 2022 மார்ச் 16 ஆம் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிரு ந்தது. மேலும், 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உப்புவெளி உப அலுவலகத்தில் ஏற்பட்ட நிதி மோசடி காரணமாக நிலுவைகளை கணிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் மற்றும் உத்தியோகத்தர்களின் இடமாற்றம் காரணமாக நிதிக்கூற்று 16.03.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்;ராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளகக் கணக்காய்வாளரினால் உள்ளகக்கணக்காய்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இதுபற்றிய ஆலோசணைகளைப் பெற்று கணக்காய்வுத் திட்டத்தினை தயாரிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் னுஆயு.ீ.01-2019 இன் பிரிவு 5.3 இன் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் குறைந்தது காலாண்டிற்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப் பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் மூன்று கூட்டங்கள் மட்டுமே மீளாய் வாண்டில் நடாத்தப்பட்டிருந்தது. | நடப்பாண்டில் காலாண்டுக் கொருமுறை நடாத்தப்படும் என்பதை அறியத் தருகின்றேன். | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4.4 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையினால் அதன் எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகள் காட்டுப் பகுதியில் வகைப்படுத்தப்படாது கொட்டப் பட்டு வருவதுடன் சபையினால் உரிய திண்மக்கழிவு முகாமைத்துவத்தை மேற் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவுகளை இறுதி கழிவகற்றும் இடம் எமது சபைக்கு தனியாக வழங்கும் பட்சத்தில் தரம் பிரிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4.5 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| 2017 இன் 19ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்கு சட்டத்திக்கு அமைவாக, 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் சபையினால் தயாரித்து அது தொடர்பான முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்டத்திக்கு அமைய நிலைபேறான அபிவிருத்தி அமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்பட்டு சபை அனுமதி பெறப் பட்டுள்ளது. | சட்டத்திக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |